Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 01    (15 - 06 - 1992)    திங்கட்கிழமை    ஓசை: 118

## ராஜீவ் கொலை விளம்பரம் லேக்ஹவுஸ் ஏற்க மறுப்பு

ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பான விளம்பரங்களை பத்திரிகைகளில் வெளியிட சிறிலங்கா அரசு அனுமதி வழங்கியுள்ள போதிலும் அரசுக்குச் சொந்தமான லேக் ஹவுஸ் பத்திரிகைகள் இவ் விளம்பரங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. இது சம்பந்தமாக கடந்த வாரம் நடைபெற்ற வாராந்தச் செய்தியாளர் மாநாட்டின் போது பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். அக் கேள்விக்குப் பதிலளித்த சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் விளம்பர விவகாரங்களில் அரசாங்கம் தலையிடுவதில்லை எனக் குறிப்பிட்டார்.

[4ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளை அழிக்கும்வரை போர் தொடரும்

# சமாதான பேச்சு சண்டையை நிறுத்தாது

## சிறிலங்கா ராணுவ தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு எத்தனை சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றாலும், புலிகளுக்கு எதிரான தமது போர் தொடரும் என்று இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்ணா கூறியுள்ளார்

இராணுவம் வெற்றி பெற்று வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சுமுகமான சூழலை உருவாக்குவதே தமது நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புலிகள் அதிரடி 4 விமானப் படையினர் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் கன்னியா வெல்வெளி விமானப்படை முகாமிலிருந்து வெளியேறிய படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர் இத்தாக்குதலில் நான்கு விமானப்படையினர் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்து பல நவீனரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று காலை 5.40 மணியளவில் பத்துக்கு மேற்பட்ட விமானப்படையினர் முகாமிலிருந்து வெளியேறி துப்பரவு செய்தவாறு வந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் மீது விடுதலைப் புலிகள் முகாமிலிருந்து 500 யார் தூரத்தில் வைத்து தாக்குதலை மேற்கொண்டனர். சுமார் 30 நிமிடங்கள் வரை தாக்குதல் நீடித்தது. இத் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் பலியாகினர். ஏனையோர் காயங்களுடன் முகாமிற்குள் தப்பி ஓடிவிட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதுவுமில்லை.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

நேற்றுக்காலை திருமலை கன்னியா வெல்வெளி விமானப்படையினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரி-56-1 ரக துப்பாக்கிகள் - 02
- ★ ரி-81-1ரகதுப்பாக்கிகள் -02
- ★ ரி-56 ரக மகசீன் - 08
- ★ ரி-81 மகசீன் - 12
- ★ நாத்தர ரவைகள் - 486
- ★ ஐ.ஆர். கைக்குண்டு - 01
- ★ ரி. என். வி. -01
- ★ ஏ.கே கோலிசர் - 04
- ★ பராலைட் - 01
- ★ மழை அங்கி - 02
- ★ சப்பாத்து சோடி - 03
- ★ தண்ணீர்க் கான் - 01
- ★ மில்ரி பட்டி - 01
- ★ தொப்பி - 01
- ★ சாப்பாட்டுப்பெட்டி - 04

## வருட இறுதிக்குள் தீர்வு பதவி போனாலும் பரவாயில்லை

### இப்படி பிரேமதாசா கூறினாராம்

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா உறுதியுடன் இருப்பதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இதனால் தான் அடுத்த தேர்தலில் தோல்வி அடைந்தால் கூட பொருட்படுத்தப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர் மே திலால் நேருவிடம் இந்த உறுதிமொழியை அளித்தார் என அவர் சண்டே ரைமஸிற்குத் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தான் உறுதியாக இருப்பதாகவும் ஆனால் இதனை இனவாதிகள் எதிர்க்கக்கூடும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'இறந்த' சிப்பாய் உயிருடன் மீண்டார்

இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் பிழையான உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நாவலப்பிட்டியவில் இடம் பெற்றுள்ளது.

...ந்து பார்த்த பொழுது அது அவரது மகனின் சடலம் அல்ல என்பதை கண்டுபிடித்தார்.

இவ் விடயம் அதிகாரிகளுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஒடுக்கப்பட்டால் தமிழர்நிலைமோசமடையும்

-குமார் பொன்னம்பலம்

### வவுனியாவில்

## புலிகளின் தாக்குதலுக்கு ஒரு பொலிஸ்காரர் பலி

வவுனியா மாமடுவ- ஆலுத்வத்த வீதியில் கடந்த வெள்ளியன்று ரோந்து சென்ற சிறிலங்கா பொலிஸ், இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலில் ஒரு பொலிஸ் பலியாகியதுடன் ஒரு இராணுவமும் ஒரு பொலிசும் காயமடைந்துள்ளனர். உயிரிழந்தவர் வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ரிசேர்வ் கான்ஸ் பிள் திலகரத்தின என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுங்கேணி பிரதேசத்தில்

வது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

இராணுவச்சிப்பாய் செனவிரட்ண என்பவர் இறந்துவிட்டதாகவும் அவரது சடலம் ஒப்படைக்கப்படும் எனவும் அவரது பெற்றோர்களுக்கு இராணுவ அதிகாரி ஒருவரால் கூறப்பட்டது.

அதன்படி சடலத்தைப் பொறுப்பேற்ற திப்பு சோமா என்பவர், மரணச் சடங்குகளுக்கென பெட்டியைத் திற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நகரில் காவலரண்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு நகருக்குள் படையினர், மேலும் பல காவலரண்களை புதிதாக அமைத்து வருகின்றனர். நகருக்குள் உள்ள லேக் வீதியில் மாத்திரம் இடபோது நான்கு காவலரண்கள் அமைக்கப்பட்டு மேலதிக படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

இதேவேளை மட்டுநகருக்குள் பிரவேசிக்கும், நுழைவாயில்கள் மற்றும் ஏனைய இடங்களில் உள்ள காவலரண்களில் கடந்த சில நாட்களாக சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. புலிகளில் சிலர் நகருக்குள் பிரவேசித்திருப்பதாக சொல்லப்படுவதையடுத்து பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக படையினர் கூறியுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள் மீதுமுழு அளவிலான தாக்குதல் நடத்தப்படுமேயானால் அது புலிகள் பொது மக்கள் உயிரிழப்பையே ஏற்படுத்தும் அதன் பின்னர் பேச்சுவார்த்தை மேசையை எந்தஒரு தமிழரும் விரும்பமாட்டார்கள் அவமான நிலையில் இருந்து பேச்சிற்கு பேச எந்தத் தமிழரும் விரும்பமாட்டான்.

எனவே அரசியல் தீர்வுஒன்று காணப்பட வேண்டுமானால் அது இட்டெழுது உடனடியாக காணப்படவேண்டும் என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மேலும், இந்த அறிக்கை புலிகளை முற்றாக அழிக்கப்பட்ட பின்னர் எந்த ஒன்றையும் தமிழர் எதிர்பார்க்க முடியாது. ஜே. வி. பி. யின் பிரச்சினையில அரசாங்கத்தின் அணுகுமுறையை நாம் அறிவோம். ஜே. வி. பி தீவிரமாக இயங்குகையில் அரசாங்கம் எப்பொழுதும் அதைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. பின்னர் ஜே. வி. பி. முழுமையாக அரசாங்கம் முறித்த பின்னர் பேச்சுவார்த்தையை அரசாங்கம் மறந்து விட்டது.

விடுதலைப் புலிகள் அடக்கப்பட்டால் ஒரு 'தீர்வுக்கான' உதட்டளவு சேவை செய்வதை அரசாங்கம் நிறுத்துவது மட்டுமன்றி தமிழரை மேலும் கஷ்டமான நிலைக்குத் தள்ளிவிடும் எனபதை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிர்வாகம் சீர்குலைவு

[வவுனியா]

நெடுங்கேணி பிரதேசத்தில் அரச நிர்வாக அலுவலகங்கள் அனைத்தும் சீர்குலைந்துள்ளன. இதன் காரணமாக அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை நிலவுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், சமநல சேவை நிலையம், கிராமசேவையாளர்கள் நிர்வாகம். தபாலகம் ஆகிய அலுவலகங்களின் நிர்வாகம் சீர் குலைந்துள்ளது.

இங்கு பணிபுரியும் அரசாங்க ஊழியர்கள் சீராகத் தம் பணிகளை மேற்கொள்வதில்லை என்றும் சொல்லப்பட்டது.

(தி)

## கட்டையர்குளம் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா கட்டையர் குளம் காட்டுப பகுதியில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

நேற்று முன் தினம் மாலை 4 30 மணியளவில் இப்பகுதியில் இரண்டு குண்டுகளையும் இரண்டு ரொக்கட்டுகளையும் இந்த விமானங்கள் வீசியுள்ளன.

# சிங்கள கட்சிகளே தீர்வை வைக்கவேண்டும்

# இன்றேல் இனப் பிரச்சினை தீரமாட்டாது

## - தொண்டமான்

(கொழும்பு)

தமிழ் மக்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு யோசனைகளை பேரினவாத கட்சிகள் முன்வைக்காத வரை இனப் பிரச்சினை தீரப் போவதில்லையென்று இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் நேற்று முன்தினம் கொழும்பில் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் புரையோடிப் போயிருக்கும் இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமானால் ஆளும் கட்சியான ஐ.தே கட்சியும், பிரதான எதிர்க் கட்சியான சுதந்திரக் கட்சியும், தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து உணர்ந்து அந்த அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய யோசனைகளை முன் வைக்க வேண்டும். இந்த கடமையில் இருந்து இந்த இரு கட்சிகளும் தவறுமேயானால இன பிரச்சினை நீடிக்குமேயொழிய தீரப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த ஒரு சகாப்தத்திற்கு மேலாக இனப்பிரச்சினை பற்றி பேசியாகி விட்டது கண்ட பலன் என்ன? அழிவுகள் தான் தொடர்கின்றன. வட்ட மேசை, அனைத்து கட்சிகள் கூட்டம், தெரிவுக்குழு, என்று பல்வேறு கோணங்களில் இனப் பிரச்சினை ஆராயப்படுகிறது. ஆனால் பேரினவாத கட்சிகள், இந்த இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன் வைக்காத வரை பிரச்சினை தீரப் போவதில்லை. எனவே இந்த இரு கட்சிகளும், தமது தீர்வு யோசனைகளை முன் வைக்க வேண்டும். அப்பொழுது தான் இனப்பிரச்சினையை ஒரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்



வீரவேங்கைநல்லையா

13-06-1992 அன்று விடுதலைப் புலிகள் போராளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள கட்சிகள் தீர்வை முன்வைக்க தேவையில்லை

## -மங்கள முனசிங்கா

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான நியாயமான தீர்வு ஒன்றை வகுப்பது சிரமமானது அல்ல என்று இனப்பிரச்சினைக்கான தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் பாராளுமன்ற தெரிவுக்குழு நியாயமான தீர்வொன்றிற்கு வருவதற்கு பிரதான கட்சிகள் ஆலோசனைகளை முன்வைக்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## தனுவைப் புகழ்ந்து நூல் வெளியிட்டோர்மீது வழக்குத் தாக்கல்

(சென்னை)

ராஜீவ்காந்தியை கொலை செய்ததாக கூறப்படும் 'தனு'வைப் புகழ்ந்து நூல்களை வெளியிட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நால்வர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

தமிழ் இன முன்னேற்றக்கழகத்தின் அமைப்பாளர் பெருஞ்சித்திரனார் தமிழ் நிலம் என

(4ஆம் பக்கம் பார்க்க)

## வயல்களில் மிதிவெடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் வயல் வெளிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் மிதிவெடிகளைப் புதைத்து வருகின்றனர். இம்மிதிவெடிகளில் சிக்கி பல தமிழர்கள் கால்களை இழந்துள்ளனர்.

இப்பகுதி தமிழ் மக்கள் விவசாயத்தில் ஈடுபடுவதைத் தடுக்கவே சிறிலங்கா இராணுவத்தினர் மிதிவெடிகளை புதைத்து வருகின்றனர்.

## விடுதலை

(லண்டன்)

வவுனியாவில் வைத்து சிறிலங்கா ஜனாதிபதியை கொலைசெய்ய சதிசெய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட வடமத்திய மாகாணசபை உறுப்பினர் விடுதலை செய்யப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்புளோமா அனுமதிக்கான பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி (21 6 92) யாழ் பல்கலைக்கழகத்தில் இடம் பெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு தகுதியான பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுமதிஅட்டை அனுப்பப்பட்டுள்ளதாகபல்கலைகழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அனுமதி அட்டைகள் பெறாதோர் இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக் கிளையுடன் தொடர்புகொள்ளவும். (05)

## வரி விளம்பரம்

### இரசாயனம்

A/L 93 அசேதன இரசாயனம் ஆரம்பம் 16 - 06 - 1992 செவ்வாய் 4. 15 P m; ஆசிரியர் சத்தீஸ் 108 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்: ( 2669 )

### தவறிவிட்டது

11-06-92 அன்று விமானத் தாக்குதலுக்கு அஞ்சி வரும் வழியில் (இணுவில்--ஆனைக் கோட்டை) இடையில் சைக்கிளில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2671)

### நூல் வெளியீட்டு விழா

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் எதிர்வரும் புதன்கிழமை (17.6.92) பிற்பகல் 3.00 மணிக்கு ''எமது உணவுத்தேவையும் உற்பத்தி இலக்குகளும்'' எனும் நூல் வெளியீட்டு விழாவும் ஆய்வரங்கும் நடைபெறவுள்ளது.

தலைமை உரையை ந.அருள்நேசன் அவர்களும் நூல் அறிமுக உரையை யோகரட்ணம் யோகி அவர்களும் ஆய்வுரையை திரு. சி. ஜெயரட்ணம் இளைப்பாறிய விவசாய உதவிப் பணிப்பாளர்) திரு.க.சந்தையா (பொருளியற்துறை விரிவுரையாளர்) திரு.செ.பத்மநாதன் (திட்டப்பணிப்பாளர் கச்சேரி) வைத்திய கலாநிதி முருகானந்தம் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

### இளைஞர் மதுரையில் கைது

(மதுரை)

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் மதுரையில் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாகவும், இவரிடம் செல்லத்தக்க கடவுச்சீட்டு. மற்றும் விசா போன்ற ஆவணங்கள் ஏதுவும் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---


## கடல் வளம் பேணுவோம்

மக்களிற்கு சத்துணவு வழங்கிடவும்
கடற்றொழிலாளர் மேம்பாட்டிற்கு உதவிடவும்
யாழ் நகரில் ஓர் புதிய நிறுவனம்

கருவாடு வகைகள் வாங்குவதற்கும்
விற்பதற்கும் எம்மை நாடுங்கள்

## நீர் நிதி

### உலர் மீன் விற்பனையகம்

ஐந்து சந்தி, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்

(சி/4550)


---

### காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [ வரையறுக்கப்பட்டது ]

வழக்கம்பரை
சுளிபுரம்

## வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 24 - 06 - 1992 புதன்கிழமை காலை 9.30மணிக்கு சுன்னாகம் கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ச. சிவஞானம் B. Sc *Dip in Ed* அவர்களின் தலைமையில் நடைபெறும். பொதுச்சபை பிரதிநிதிகள் தவறாது குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகம் கொடுத்து ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

- செயலாளர்

குறிப்பு: பொதுச்சபை பிரதிநிதிகள் இடம் பெயர்ந்து இருப்பதால் அவர்களின் முகவரி அவர்களால் இதுவரை அறிவிக்கத் தவறியுள்ளவர்கள் கூட்ட நிகழ்ச்சி நிரலை வழக்கம்பரையில் உள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தின் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே எம்மிடம் தொடர்பு கொண்டு விலாசம் தந்தவர்களுக்கு அவர்களால் தரப்பட்ட விலாசத்திற்கு கூட்ட நிகழ்ச்சி நிரல் தபால் மூலம் அனுப்பப்படும்.

[ சி / 4553]

---

## நினைவு கூருகின்றோம் . . .

## 1992-06-15

1985ஆம் ஆண்டு இதேதினத்தில், மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 18 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு மட்டக்களப்பு நிந்தவூர்ப்பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லும்போது வீரச்சாவெய்திய

**கப்டன் பிறின்ஸ்** [ஏகாம்பரம் யோகலிங்கம் - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை,மட்டக்களப்பு]

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு, சுட்டுக் கொலை] செய்யப்பட்ட

**ஜேக்கப்** [திருநாவுக்கரசு ஜெயக்குமார் - வன்னேரிக்குளம்]

1990ஆம் ஆண்டு லகுகலவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**டேவிற்** (க. ராஜேந்திரன் - பொத்துவில், அம்பாறை)

**ராவ்** (முகமது ரபீக் - பொத்துவில், அம்பாறை)

பாணமயில், எமது முகாம் ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**குபீர்** (அக்கரைப்பற்று, அம்பாறை)

**அன்வர்**

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**டெனி,சித்தப்பா** (சின்னத்தம்பி விஜயன் - புதுக்குடியிருப்பு வாழைச்சேனை,மட்டக்களப்பு)

**தினேஷ்** [யோகானந்தம் பிரபாகரன் - உயிலங்குளம், துணுக்காய்]

**2-ம்லெப்.கணேசமூர்த்தி** (இராமசாமி சிவபெருமான் - சாளம்பைக்குளம்,வவுனியா)

**றெஜி** (வவுனியா)

**அரி** [ஆறுமுகம் மோகனதாஸ் - 122 ஸ்கந்தபுரம், கிளிநொச்சி]

திருக்கோணமலை/மூதூர், கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிமோதலில் வீரச்சாவெய்திய -

**ஜெகன்** [ஆப்தீன்முகமட் யூசுப் - குச்சவெளி, திருக்கோணமலை]

மன்னார், தலைமன்னார் பகுதியில் சிறிலங்காப் படையினரின் முகாம் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**புலோமின்** [தெய்வேந்திரன் - கட்டையடம்பன், மன்னார்]

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**இராமு** [சந்தனம் சங்கர் - நெழுக்குளம், வவுனியா]

வவுனியா, காமினி வித்தியாலய முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**பர்சான்** [அப்துல்காதர் சம்சுதின் - சாக்கையன்குளம், வவுனியா]

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட, பொத்துவில் - குஞ்சனோடைப் பாலத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் மற்றும், முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவில். அறுகம்பையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

திருக்கோணமலை - மூதூர்ப்பகுதியில், சிறிலங்கா படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 - தமிழர்கள்

1991 ஆம் ஆண்டு வவுனியா செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லெப்.தவக்குமார்** [கிருஸ்ணபிள்ளை சிவபாலசுந்தரம் - கொக்குத்தொடுவாய், மணலாறு]

**கீதன்** [சத்தியா பிரபாகரன் - பனங்கட்டிக்கொட்டு, மன்னார்]

**லெப்.ரவி** [குமாரசாமி சந்திதுமார் - இந்திரன் அம்மன் கோயில் வீதி, கரவெட்டி]

வவுனியா - பூவரசங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 3 - தமிழர்கள்

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4546)

---

## இசைமாலை நிகழ்ச்சி பின்போடப்பட்டுள்ளது

செஞ்சோலைக் குழந்தைகளும், போராளிகளும் இணைந்து வழங்கும் இசைமாலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி யூலை மாதம் நடைபெறுமென அறியத்தருகிறோம். நிகழ்ச்சி நடைபெறும் நாட்கள் செய்தித் தாள்கள் மூலமும், புலிகளின் குரல் வானொலி மூலமும் விரைவில் அறியத் தரப்படும். திட்டமிட்டபடி நிகழ்ச்சியை நடத்தமுடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

- செஞ்சோலை நிர்வாகிகள்

[ 2673 ]

---


*Eswara Bagawaan & Company*

104 (298) HOSPITAL ROAD, JAFFNA

இறக்குமதி செய்யப்பட்ட சொக்லேட் வகைகள் விற்பனைக்குண்டு. (சி/2670)

ஓராண்டு நிறைவெய்தும்

# முன்னணி உணவுச் சேவை

நுகர்வோர், அன்பர்கள், ஆதரவாளர்கள், வழங்குநர்கள்

யாவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக

தொடர்ந்தும் உங்கள் மனமுவந்த ஆதரவை நாடுகின்றோம்.

* சைவ, அசைவ உணவு வகைகள்
* குளிர்பானம் - குளிர்களி
* சிற்றுண்டி வகைகள்
* பாண் கேக் வகைகள்

## குறைந்த விலை! நிறைந்த சேவை!!

## மக்கள் மனதில் என்றும் நிறைந்த



# சுவையருவி

மின் நிலைய வீதி — யாழ்ப்பாணம்

குறிப்பு : விருந்துபசார சேவைகள் பொறுப்பேற்கப்படும்.

(சி/4549)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

உடலைத் தாக்கும் அல்லது மனச்சாட்சியை மறுதலிக்கும் எந்தச் சட்டமும் குடிமக்களைக் கட்டுப்படுத்தாது.

— ஸர் வில்லியம் பிளேக்ஸ்டோன் —

ஈழநாதம்

81, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் 15-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 65

## பேரினவாதக் கட்சிகள் திருந்த வேண்டும்

"தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய தீர்வு யோசனைகளை பேரினவாத கட்சிகள் முன்வைக்காதவரை இனப்பிரச்சினை தீரப் போவதில்லை'' இவ்வாறு இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார். மேலும் ''அனைத்துக் கட்சிகள் கூட்டம், தெரிவுக்குழு என்று பல்வேறு கோணங்களில் இனப்பிரச்சினை ஆராயப்படுகின்றது. ஆனால், பேரினவாதக் கட்சிகளான. ஐ. தே. கட்சியும், ஸ்ரீ. ல. சு. கட்சியும் அரசியல் தீர்வொன்றை முன்வைக்காதவரை பிரச்சினை தீரப் போவதில்லை. எனவே இந்த இருகட்சிகளும் தமது தீர்வு யோசனைகளை முன்வைக்க வேண்டும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் தொண்டமானின் இக்கருத்து இலங்கையின் கடந்தகால அரசியலை தெளிவாகப்புரிந்து கொண்டதன் வெளிப்பாடாகும். இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு பிரதான முட்டுக்கட்டையாக இருப்பவை சிங்கள பேரினவாதக் கட்சிகளே. இப்பேரினவாதக் கட்சிகள் கடந்த காலத்தில் எப்பொழுதுமே இனப்பிரச்சினை தீர்விற்கான சாத்தியப்பாடான கொள்கை எதையும் கடைப்பிடிக்கவில்லை.

திரு. தொண்டமான் குறிப்பிட்டது போன்று இனப்பிரச்சினை பல்வேறு கோணங்களிலும் பலவாறாக ஆராயப்பட்டு விட்டது. வட்டமேசை என்றும், சர்வகட்சிமாநாடு, தெரிவுக்குழு என்றும் பலராலும், பலவாறும் ஆராயப்பட்டுள்ளது. ஆனால், தீர்வுதான்

## மீண்டும் 'அக்னி' ஏவுகணை இரு மாதத்தில் பரிசோதனை

இந்தியா சொந்தமாகத் தயாரித்துள்ள 'அக்னி' ஏவுகணையின் மூன்றாவது கட்டப்பரிசோதனை இன்னும் இரண்டு மாத காலத்தினுள் நடைபெறும் என்று இந்திய பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மூலம் அறிய வந்துள்ளது. அதிஉயர் தொழில் நுட்பத்தை திறமையான முறையில் பயன்படுத்திக் கொள்வதன் ஒருகட்டமாகவே இம்மூன்றாம் கட்ட பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

மூன்றாம் கட்டப் பரிசோதனையை மேற்கொள்வதன் மூலமாக இரண்டு விடயங்களைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், உலகுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றது என்று புதுடில்லியிலுள்ள அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

முதலாவதாக அமெரிக்காவின் அல்லது வேறு எந்தவொரு நாட்டினதும் நெருக்குதல்களுக்கு உட்பட்டு 'அக்னி' பரிசோதனையை இந்தியா கைவிடப் போவதில்லை. இதன் மூலமாக இது ஒரு ஆயுத அமைப்பு அல்ல தொழில் நுட்ப திறனை வெளிக்காட்டும் ஒரு கருவியே என்பதை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும்.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்டப் பரிசோதனையின் போது ஏவுகணை முதலில் வெற்றிகரமாக ஏவப்பட்ட போதிலும்கூட அது குறிப்பிட்ட இலக்கை அடையவில்லை என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட பரிசோதனையின் போது இடம்பெற்ற இத்தோல்வி பற்றி நிருபர்களிடம் விஞ்ஞானத்துறை ஆலோசகர் டாக்டர் வி. எஸ். அருணாசலம் கருத்து வெளியிட்ட போது அவரது முகத்தில் தோல்வி மனப்பான்மை காணப்படவில்லை. பதிலுக்கு நம்பிக்கையே துளிர்விட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

''கடைசிக் கட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினை ஒரு பெரிய தடையோ பாரிய பின்னடைவோ அல்ல'' என்று சொன்ன அவர் இது நிவர்த்தி செய்யக் கூடிய ஒரு சிறு தவறு மட்டுமே என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார் ஒரு சிறுதவறைத் தவிர ஏனைய எல்லாம் சரியாகவே இயங்கின என்று அவர் தெரிவித்தார்.

சரியான இலக்கை அடைய முடியாத தவறு எவ்வாறு ஏற்பட்டது என்பதை விஞ்ஞானிகளும், தொழில்நுட்ப நிபுணர்களும் ஆராய்ந்து கொண்டு இருக்கும் போது அதேவேளையில் இப் பரிசோதனை மூலமாக ராஜதந்திர ரீதியிலாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை வெளியுறவுக் கொள்கை ஆய்வாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

'அக்னி' ஏவுகணைப் பரிசோதனையை தொடர்ந்து மேற்கொள்வதையிட்டு அமெரிக்கா கவலை தெரிவித்திருந்ததையிட்டும் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் ஆராய்ந்துள்ளனர்.

பிராந்திய பதற்ற நிலைநிலவுகின்ற ஒரு பகுதியில் இவ்வாறான ஏவுகணைப் பரிசோதனை செய்வது பிராந்தியப் பாதுகாப்பை மேலும் மோசமாக்கவே வழிகோலும் என்று அமெரிக்க அரச திணைக்கள பேச்சாளர் ஒருவர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

# சிந்துவில் வன்முறைகள்; இந்தியாவின் தூண்டுதல்!

-பாகிஸ்தான் குற்றச்சாட்டு

## மித்தல் கடத்தலின் பின்னணி என்ன?

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதுவரக அதிகாரியான ராஜேஷ் மித்தல் பாகிஸ்தானிய புலனாய்வு பிரிவினரால் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதை தொடர்ந்து பாதிக்கப்பட்ட நிலையிலிருந்த இந்திய பாகிஸ்தானிய உறவுகள் மேலும் மோசமான ஒரு கட்டத்தை அடைந்துள்ளது.

இதற்குப் பதிலடியாக இந்தியாவிலிருந்த இரு பாகிஸ்தானிய ராஜதந்திரிகளை வெளியேற்றிய இந்தியா இரு நாடுகளுக்குமிடையே நடைபெறவிருந்த வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான ஆறாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகளை ரத்துச் செய்துள்ளது.

ராஜேஷ் மித்தல் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலேயே அவர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டதென்று பாகிஸ்தான் தரப்பில் சொல்லப்பட்டுள்ள போதிலும் கூட இவ்வாறான ஒரு நடவடிக்கையை இஸ்லாமாபாத் தேர்ந்தெடுத்தது ஏன் என்பதைச் சொல்வது கடினமாகவே உள்ளது.

பாகிஸ்தானின் பிரச்சினைக்குரிய பகுதிகளில் ஒன்றான சிந்து மாகாணத்தில் ராணுவ நடவடிக்கை ஒன்றுக்கான சகல ஆயத்த நடவடிக்கைகளும் செய்யப்பட்டிருந்த அதே நிலையிலேயே மித்தல் மீது இஸ்லாமாபாத் நடவடிக்கை எடுத்தது.

### இந்தியாவின் சந்தேகம்

இந்து மாகாணத்தில் இடம் பெறும் பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகளின் பின்னணியில் இந்தியா உள்ளதாக பாகிஸ்தான் அண்மைக்காலங்களில் குற்றஞ்சாட்டி வந்துள்ளது. இந்நிலையில் இக் குற்றச்சாட்டுக்கள் உண்மை என்று மக்கள் மனதில் பதியப்படவேண்டும் என்பதற்காகவே மித்தல் மீதான பாய்ச்சலை இஸ்லாமாபாத் மேற்கொண்டதென டில்லி நம்புகிறது.

### வெளியேற்ற நடவடிக்கை

இதனால் ஏற்பட்ட பதற்ற நிலையும், பழிக்குப்பழி என்ற விதமாக இரு நாடுகளும் மேற்கொண்ட வெளியேற்ற நடவடிக்கைகளும் தற்பொழுது ஓரளவுக்கு ஓய்ந்து விட்டது இந்நிலையில் நடந்து முடிந்த தவறுகளை உணரக்கூடிய நிலையிலேயே இரு நாடுகளும் இன்று உள்ளன.

சில மாதங்களின் முன்னர் பஞ்சாப்பில் இந்திய எல்லைப் பகுதிக்குள் காணப்பட்ட பாகிஸ்தானிய ராணுவ வீரர்கள் நான்குபேர் இந்தியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். சில மாதங்களாகவே இந்தியப்பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாக பாகிஸ்தான் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது.

இவர்கள் தவறுதலாகவே இந்திய எல்லைக்குள் வந்து விட்டதாக பாகிஸ்தான் கூறிய போதிலும் இந்தியா அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை இவ்வாறு தவறுதலாக அவர்கள் வருவது சாத்தியம் அற்றது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இச் சம்பவத்தை தொடர்ந்து பாகிஸ்தானிய தூதுவராக அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டு இந்தியாவை விட்டு வெளியேற்றப்பட்டார் இது போன்ற பல சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று இந்தியா பாகிஸ்தானிய உறவுகளைப் பாதித்து வந்துள்ளது.

ஆனால் கடைசியாக இடம் பெற்ற ராஜேஸ் மித்தல் சம்பவம் இவ்வளவு நாட்களிலும் இடம்பெற்ற சம்பவங்களை விட மிகவும் மோசமானவை. சிந்து மாகாணத்தில் இடம் பெறும் சம்பவங்களை இந்தியாவின் மேல் சுமத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியே இது என இந்திய ராஜதந்திரிகள் பலரும் கருதுகின்றனர்.

# இந்தியா ஏவுகணை பரிசோதனை

## தமிழகத்தில் மத்திய அமைச்சருக்கு

# கறுப்புக்கொடிகாட்டிய

வாறும் ஆராயப்பட்டுள்ளது. ஆனால், தீர்வுதான் மேற்கொள்ளப்படவில்லை. மேற்கொள்ளப்பட்ட தீர்வுகளையும் மாறி மாறி பேரினவாதக் கட்சிகள் அமுல்படுத்தவும் விடவில்லை.

இதேவேளை தமிழர் தரப்பினர் இனப்பிரச்சினைக்கு பலதடவை தமது தீர்வுத்திட்டத்தை முன்வைத்திருந்தனர். அதேவேளை 'தமிழ் தலைவர்கள்' தமது சுயநல நோக்கத்திற்காக தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத தீர்வுத்திட்டங்களைக் கூட ஏற்றுக் கொண்டனர். ஆனால் சிங்கள அரசாங்கங்களோ இனப்பிரச்சினையை தீர்க்கக் கூடிய தீர்வுதிட்டம் எதையும் முன்வைக்கவில்லை. அத்தோடு அற்பசொற்ப சலுகைகள் கொண்ட தீர்வுத் திட்டங்களைக் கூட நிறைவேற்றவில்லை. இந்நிலையில் தான் தமிழ் மக்கள் பிரச்சினைத் தீர்வுக்கு தமிழீழம் ஒன்றேதான் என முடிவிற்கும் வந்தனர்.

இந்நிலையில், இன்று இனப்பிரச்சினை தீர்விற்கு விடுதலைப்புலிகளும் தீர்வுதிட்டம் ஒன்று வைக்க வேண்டும் என சிங்கள அரசு வற்புறுத்துகிறது. ஆனால் தமிழ் மக்கள் இனப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு தமிழீழம்தான் என முன்னரே தெளிவாக - 1977 தேர்தல் மூலம் - தெரிவித்துவிட்டனர். இந்நிலையில், அடுத்த தீர்வுத்திட்டம் ஒன்றை ஏன் தமிழர்கள் வைக்கவேண்டும்?

இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட ஒப்பந்தங்களையும், தீர்வுத்திட்டங்களையும் குழப்பியடித்த பேரினவாதக் கட்சிகளல்லவா இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்க வேண்டும்? இதைவிடுத்து தமிழரிடம் தீர்வுத்திட்டம் தருமாறு கோருவதும், அது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டுவந்து விடப் போவதில்லை.

இதனையே அமைச்சர் தொண்டமானும் வற்புறுத்தியுள்ளார். இனப்பிரச்சினை தீர்விற்கு சிங்கள பேரினவாதக்கட்சிகளே தீர்வுத்திட்டங்களை முன்வைக்க வேண்டும். சிங்கள பேரின வாதக்கட்சிகளின் மனமாற்றம் எதுவுமின்றி இனப்பிரச்சினையைத் தீர்த்து விடமுடியாது. இதனை சிங்கள பேரினவாதக்கட்சிகள் உணராதவரை அல்லது கருத்திற் கொள்ளாதவரை இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு என்பது சாத்தியப்படப் போவதில்லை.

## தாயகம் திரும்பிய அகதிகள்

# சொந்த இடங்களுக்கு திரும்புகின்றனர்

(வவுனியா)

தமிழ் நாட்டிலிருந்து சமீபத்தில் வந்து வவுனியா நகரப் பகுதி முகாம்களில் தங்கியுள்ள அகதி மக்களில் பலர் வட பகுதி நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

வவுனியா நகரில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தாண்டிக்குளம், வேப்பங்குளம் அகதிமுகாம்களில் தங்கியுள்ள அகதி மக்களே இவ்வாறு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்.

குறிப்பிட்ட முகாம்களில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியினாலும், அடிப்படைத் தேவைகளின் குறைபாடுகளினாலும் இராணுவ அச்சுறுத்தலினாலும் பெருந்தொகையான மக்கள் தமது சொந்த இடங்களான கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

(தி)

## சார்க் நாடுகள் இணக்கம்

(கொழும்பு)

புவி கால நிலைமாற்றம் மற்றும் உயிரியல் மாறுபாடு தொடர்பான சாசனங்களில் கைச்சாத்திடுவதற்கு சார்க் அமைப்பைச் சேர்ந்த நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

# பாகிஸ்தான் அச்சம்

நடுத்தர வீச்சு ஏவுகணையான அக்கினி'யை இந்தியா பரிசோதனை செய்திருப்பது பாகிஸ்தானுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாக இஸ்லாமாபாத்தில் வெளியான உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் அக்னி ஏவுகணைப்பரீட்சையை அடுத்து ஏற்படும் நிலைமையை சமாளிக்க ஏவுகணைத் தயாரிப்பில் பாகிஸ்தான் கவனம் செலுத்த வேண்டியுள்ளது எனவும் அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

"அக்கினி" ஒரு ஆயுத அமைப்பல்ல அது ஒரு தொழில் நுட்பத் திட்டமே என இந்தியா திரும்பதிரும்ப சொல்லி வருகின்றபோதிலும், அதனால் ஏற்பட்டுள்ள தாக்கம் ஆயுதப் போட்டியொன்று துணைக்கண்டத்தில் ஏற்படக் கூடிய நிலையை ஏற்படுத்தியுள்ளது

## ஏவுகணைப் பரிசோதனை பாதுகாப்பிற்கு அவசியம்

-சரத் பவார்

(பூனா)

அக்னி ஏவுகணையின் மூன்றாவது கட்டப்பரிசோதனை வானிலைஒத்துழைத்தால் இன்னும் இரண்டு மாதத்தில் நடத்தப்பட்டு ஏவுகணை ஒன்று வானில் செலுத்தப்படும் என்று இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பூனாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்தியாவின் பாதுகாப்பிற்கு இது போன்ற பரிசோதனைகள் அவசியம் எனத் தெரிவித்தார்.

## இந்தியாவிற்கு அமெரிக்க உதவி

# நிபந்தனை விதிப்பு கோரிக்கையை பாராளுமன்ற கமிட்டி நிராகரிப்பு

[வாஷிங்டன்]

பாகிஸ்தான் விடயத்தில் நடந்து கொண்டது போலவே இந்தியாவிற்கு அமெரிக்க உதவி அளிக்கப்படுவதை அணுவாயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும் என்ற யோசனையை அமெரிக்க பாராளுமன்றக் கமிட்டி நிராகரித்து விட்டது.

இந்தியாவிற்கு எதிரானவிதி நீக்கப்பட்ட பிறகே இந்திய உதவி ஒதுக்கீட்டில் திருத்தம் கொண்டு வருவதற்கு ஜனநாயகக் கட்சியின் எம்.பி சார்லஸ் வில்சனுக்கு கமிட்டி அனுமதி அளித்துள்ளது.

அணுவாயுத பரவல் பற்றிய இந்திய- அமெரிக்கப் பேச்சுக்கள் வியாழக்கிழமை தொடங்க இருப்பதால் அதைச் சீர்குலைக்க கமிட்டி விரும்பாமையே இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கோரியமைக்கு காரணம் எனத் தெரிய வருகிறது.

மேலும் அணுவாயுத பிரச்சினையில் பாகிஸ்தானைப் போலவே இந்தியாவும் நடத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தியத் தூதுவர் கமிட்டித் தலைவருக்கு கடிதம் எழுதியிருந்தாலும், அமெரிக்கா வருடந்தோறும் சுமார் 20கோடியே 40லட்சம் டாலர் கடனுதவி வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.

## கம்போடியாவில்

# கெமரூச் போராளிகளிடம் ஆயுதங்களைய வேண்டும்

(பிளாம்பெக்)

கெமரூச் குழுவினர் மறுத்துள்ள போதிலும் கூட அப் போராளிக் குழுவிடமிருந்து ஆயுதங்களைக் களையும் இரண்டாம் கட்டப் பணியைத் தொடங்குவதென கம்போடியாவிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் இடைக்கால அமைப்பு தீர்மானித்துள்ளது.

சீரமைப்பு பணிகளை தொடங்கவும், அடுத்த ஆண்டில் ஜனநாயகத் தேர்தல்களை நடத்தவும் இந்த இரண்டாம் கட்ட நடவடிக்கை அவசியமானது என ஐ.நா.வின் இடைக்கால அமைப்பு கருதுவதாக தெரிகிறது.

தமது குழுவினரின் ஆயுதங்களை அகற்றக்கூடாது என்று கெமரூச் குழுவின் தலைவர் சியூ காம் பென் கூறியதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடைக்கால அமைப்பில் இந்த அறிவிப்பையடுத்து கம்போடியாவின் சீரமைப்பிற்கான சர்வதேச உதவி பற்றி டோக்கியோவில் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கியூ சாம் பென் கூறிவிட்டார்.

# பிரிட்டிஷ் இளவரசி டயானா கண்ணீர் விட்டு அழுதார்

(லண்டன்)

பிரிட்டிஷ்இளவரசிடயானா நிலை தளர்ந்து அழுதார் என்று அதனை நேரில் கண்டவர்கள் கூறியதாகபிரிட்டனில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது.

வட இங்கிலாந்திலுள்ள சவுத்போர்ட் நகர புற்றுநோய் சிகிச்சைஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த இளவரசி டயானா, விஜயத்தை முடித்துக் கொண்டு காரில் ஏறப் போகும் போது கண்ணீர் விட்டு அழுததுடன் கையால் முகத்தையும் மூடிக்கொண்டார்.

இளவரசி டயானா தற்கொலை செய்ய முயன்றதாக செய்திகள் வெளியாகிய பின்னர் அவர் கலந்து கொண்ட முதலாவது உத்தியோக பூர்வ விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# பதினொரு பேர் கைது

மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங் சென்னைக்கு வந்தபோது அவருக்கு கறுப்புக்கொடி காட்ட முனைந்த ஏழுபேர் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டனர் இவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்தவர்களாவர் இதே காரணத்திற்காக காஞ்சிபுரத்திலும்நான்குபேர் பொலிசாரால் கைதாகினர்.

# இந்திய அணுசக்தி நிலைய ஊழியர் வேலை நிறுத்தம்

(டில்லி)

பாபா அணுசக்தி ஆராய்ச்சி நிறுவனம் தொழிலாளர் பிரச்சினை காரணமாக சைரஸ், அபஸரஸ், துருவா ஆகிய அணுஉலைகள் இயங்குவதை நிறுத்தி வைத்தது.

கால வரையற்ற வேலை நிறுத்தம் இங்கு நடைபெறுகிறது. அணுஉலைகள் உள்ள இடத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

## அமெரிக்கா பற்றி

# இந்தியாவும் சீனாவும் ஒத்தகருத்துகொண்டுள்ளன

சீன - இந்திய இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும், சீன அதிபரும் இந்தியாவுக்கு உத்தியோக பூர்வமாக வரவுள்ளனர்.

நேற்று முன்தினம் றியோடி ஜெனரோவில் இந்தியப்பிரதமர் பி.வி. நரசிம்மராவை சந்தித்த சீனப் பிரதமர் லீபெங் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான உறவு குறித்து இந்தியாவும், சீனாவும் ஒரே மாதிரியான கருத்துக்களையே கொண்டுள்ளதாகவும், அமெரிக்காவுடன் தொடர்புகள் மேம்பட்டு வந்தாலும் கூட தொழில் நுட்ப அறிவுகளை வழங்குவதில் வாஷிங்டன் பின்வாங்குவதாக இருதலைவர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தியாவின் விண்வெளித் திட்டம் ஆக்கப் பணிகளுக்கானது என்பதை சீனா அறிந்திருப்பதாகவும். அதை ஆதரிப்பதாகவும் சீனப் பிரதமர் லீபெங் நரசிம்மராரிடம் கூறியுள்ளார்.

# அமெரிக்கா வேண்டுகோள் இஸ்ரேல் நிராகரிப்பு

(ஜெருசலம்)

அமெரிக்க பாதுகாப்புத் துறை ஒப்பந்தக்காரர் சம்பந்தப்பட்ட ஆயுதம் வாங்கியதில் ஊழல் மோசடி சம்பந்தமாகச் சிறை வைக்கபபட்டுள்ள இஸ்ரேலின் முன்னாள் ஜெனரல் ஒருவரை விசாரிப்பதற்கு அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை இஸ்ரேல் நிராகரித்துள்ளது. இதனால் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே புதிய பிளவுகள் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலின் முன்னாள் விமானப்படை பிரிகேடியர் ஜெனரல் ரமி டொடான் என்பவரை விசாரிக்க விடாமல் இஸ்ரேல் தடுத்துள்ளதால், இஸ்ரேலுக்கு வருடந்தோறும் அளிக்கப்படும் நூற்றிஎண்பது கோடி டாலர் ராணுவ உதவியை இழக்க நேரிடும் என்று இந்த ஊழல் மோசடிபற்றி விசாரிக்கும் உப கமிட்டியின் தலைவரான அமெரிக்க காங்கிரஸ் வாதியான ஜோன்டிங்கெங் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் வேண்டுகோளை நிராகரித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு அமெரிக்கப் பாதுகாப்பு இலாகாவிற்கு கடிதம் எழுதியுள்ளது என்று இஸ்ரேலிய பாதுகாப்பு வட்டாரங்கள் கடந்த வியாழனன்று தெரிவித்துள்ளது.

ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள மேற்குக் கரைப்பகுதியிலும் தொடர்ந்து யூதர் குடியேற்றத்தை இஸ்ரேல் விஸ்தரித்து வருவதன் விளைவாக அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்குமிடையே ஏற்கனவே இருந்துவரும் மனக்கசப்பை இஸ்ரேல் நிராகரித்தது மேலும் மோசமடையச் செய்யும் என்றும் அவதானிகள் கருதுகிறார்கள்.

ஈழநாதம்

நினைவஞ்சலி

திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து 89 / 90 கல்வியாண்டுக்கு யாழ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு கடந்த 15-6-90 இல் வீரச்சாவடைந்த வீரவேங்கை டங்கா (மார்க்கண்டு அருமைநாயகம்) அவர்களின் 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் நாளை பிற்பகல் 3 00 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்

இந்தியாவிற்கு பிரிட்டிஷ் நிறுவனம்

# அணு ஆயுத உதிரிப் பாகம் இரகசியமாக விற்பனை

(லண்டன்)

பாதுகாப்புத்துறை இயந்திர சாதனங்கள் உற்பத்தி செய்யும் உலகின் மிகப்பெரிய பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று இந்தியாவில இரசிய அணுவாயுத மற்றும் ஏவுகணை ஆயுத நிலையத்துக்கு முக்கிய உதிரிப் பாகங்கள் வழங்கியிருப்பதாக பிரிட்டனில்சண்டே ரயிம்ஸ் பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

இந்தச் செய்தி உண்மையாக இருந்தால் அது பெரும் சர்ச்சையை எழுப்பும் விவகாரமாகும்.

பிரிட்டனுடன் நெருங்கிய தொடர்புகொண்ட நட்புறவு நாடுகள் தவிர ஏனைய நடுகளுக்கு ஏவுகணை அல்லது அணுவாயுத நுட்பங்களை வழங்குவதற்கு பிரிட்டன் அரசு தடை விதித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஏற்றுமதிச் சட்டங்கள் விதிமுறைகள் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காக இந் நிறுவனம் பம்பாயிலுள்ள அணு ஆற்றல் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட இந்த உபகரணங்கள் மருத்துவ ஆராய்ச்சிக்கானவை என குறிப்பிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏவுகணைகள், அணுசக்தி தொழில் நுட்பங்கள் பரவுவதை ஊக்குவிக்காமல் இருக்கும் ஒரு கொள்கைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஏற்றுமதி அனுமதி வழங்கும் திட்டத்தில் இருக்கிறது.

அணு ஆயுத பரவல் உடன்படிக்கையை இந்தியா சட்டை செய்யாததால் இந்தியாவிற்கு இந்த பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதி பெறுதல் முடியாததாகவே இருக்கும்

ராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு அஞ்சி

# இடம் பெயர்ந்த வலி-வடக்கு மக்கள்

# அகதிமுகாம்களில் தங்க அச்சம்

(யாழ்ப்பாணம்)


சிறிலாகா இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்கள் அகதிமுகாம்களிலும் பொது இடங்களிலும் தங்குவதற்கு அச்சம் தெரிவித்துள்ளனர். இம் மக்களின் அச்சத்தை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது

அகதிமுகாம்கள், கோயில்கள் மற்றும் பொது இடங்கள் மீதும் கடந்த காலத்தில் சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய குண்டுத்தாக்குதல்களில் பலபொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி நிலைமை உருவாகியுள்ளது. இந்த அச்ச நிலைமையை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அதிகாரிகள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளிடம் கேட்டிருக்கின்றனர். அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடமே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

இடம் பெயர்ந்த மக்களிற்கு நிவாரணம் வழங்குவது மற்றும் இவர்களுக்கான நலவாழ்வுத் திட்டங்கள் குறித்தும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அகதிமுகாம்கள் போன்றவற்றில் அகதிகள் இருப்பது தமது செயற்பாட்டுக்கு வசதியானது என்று அந்த நிறுவனங்கள் கருத்து தெரிவிக்கின்றன.

(க)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 31 - 5 - 1982

அநியாய இழப்பில் 15 - 6 - 1990

சோமசுந்தரம் பிரபாஹரன் (ஹரன்)

[கோப்பாய் நாவலர் பாடசாலை மாணவன்]

திதி 22 6-92

# பெருந்தோட்டம் கையளிப்பு தொழிற்சங்கங்கள் அதிர்ச்சி

தொழிற்சங்கங்களுக்கு முன் அறிவித்தல்செய்யாமல்பெருந்தோட்டத்துறை அமைச்சு திடீரென தோட்டங்களின் நிர்வாகப் பொறுப்பை புதிய கம்பனிகளிடம் ஒப்படைத்துள்ளதுடன் அக்கம்பனிகளிடம் ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டுள்ளது இச் சம்பவங்களினால் தொழிற்சங்க மட்டங்களில் அதிர்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது

அமைச்சின் இந்த செயலை ஆட்சேபித்து உடனடியாக முன்னர் ஒப்புக்கொண்டதன்படி கூட்டு ஒப்பந்தம்ஒன்றுக்கு ஆவன செய்ய வேண்டுமென இ. தே. தோ. தொ சங்கத்தின் நிர்வாகசெயலாளர் எச். மொகிதீன் பெருந்தோட்ட துறை அமைச்சர்ரூபா கருணா திலகாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார்.

அக்கடிதத்தில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது. தொழிலாளர் தொழில்பாதுகாப்பு தொடர்பாக முக்கூட்டு ஒப்பந்தம் செய்வதற்குமுன்பெருந்தோட்டக்கூட்டுத்தாபனங்களின் நிர்வாகத்தை தனியார் கம்பனிகளிடம் ஒப்படைத்தமைக்கு இ. தே தோ. தொழிலாளர் சங்கம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

மேலும் கம்பனிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைப்பதில்

## மாதகல் புனித அந்தோனியார் ஆலயம்

13-06-92 இல் நடைபெற இருந்த புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் 15 ஆம் திகதி நற்கருணை ஆசீர்வாதமும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7-00 மணிக்கு திருநாட் திருப்பலியுடன் திருச்சுரூப பவனியும் திருச்சுரூப ஆசீர்வாதமும் நடைபெறும்.

ஆலய நிர்வாகம்

(2676)

### நூல்

னு புத்தகத்தை விற்பனை செய்தார்.

புதுவை கம்பன் கலையரங்கில் நடைபெற்ற பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின் போதே இப்புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன.

அப் புத்தகத்தில் தனுவைப் புகழ்ந்து பாடப்பட்ட கவிதை அடங்கியிருந்தது.

இந்த தமிழ் நிலம் புத்தகத்தை எழுதிய பெருஞ்சித்திரனார் அச்சிட்ட சென்னை தேன்மொழி அச்சக உரிமையாளர் புத்தகத்தை விற்பனை செய்த சென்னையைச் சேர்ந்த மயிலைவாசு, புதுவை அய்யங்குட்டி பாளையம் பச்சையப்பன் ஆகிய நால்வருக்கெதிராக சட்டவிரோத நடவடிக்கை தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### ராஜீவ் கொலை

தினகரன், டெய்லி நியூஸ், தினமின போன்ற பத்திரிகைகளை வெளியிடும் லேக்ஹவுஸ் நிறுவனம் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமானது என்பதும், அதன் நிர்வாகம் சிறிலங்கா அரசினாலேயே மேற்கொள்ளப் படுகிறது என்பதும். அந் நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதியினாலேயே நியமிக்கப் படுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### புலிகள்

யும் நாம் அறிவோம்

மேலும், பதில் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கா கூறியிருப்பது போல இராணுவத் தீர்வு தான் அரசாங்கத்தின் நிலை என்றால், அரசியல் தீர்விற்கான சிறந்ததும்ஒரே ஒரு இடமும் பாராளுமன்றத் தெரிவுக்குழு என்று அரசாங்கம் கூறிவருவதெல்லாம் வெளிவேசப் பேச்சு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

### இறந்த

அறிவிக்கப்பட்டது குறித்த சிப்பாய் இருக்கிறாரா? இறந்துவிட்டாரா என்றுகேள்வி எழுப்பப்பட்ட நிலையில் மறுதினம் செனவிரட்ண உயிருடன் வீடு வந்து சேர்ந்தார்

### புலிகளை

இதேவேளை இராணுவ நடவடிக்கைகள் நேரத்துக்கு நேரம் இடைநிறுத்தப்படலாம் ஆனால் இது யுத்தத்தின் முடிவாக மாட்டாது எனவும் இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல்சிசில் வைத்தியரட்ன மேலும் தெரிவித்தார்.

### விடுதலை

தாக தெரியவருகிறது.

இவர்மீது மருதானை பொலிஸ் நிலைய அதிகாரியால் பொய்யாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டதாக செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

திதி 12 6-92

குழலினும் இனிய உன் குரலினைக் கேட்டு — எம்
குலமே மகிழ்ந்தது எம் குமரா உனைப்பார்த்து -
நின்
மழலை மொழிப்போர்வை மனதை அணைத்
திருக்க — துன்பம்
மறந்தே வாழ்ந்திருந்தோம் புவி மீது
பள்ளிச் சென்று துள்ளிச் சென்ற நீ - மாலை
பாடை மீதினில் வந்தாயே — இந்த
பாவிகள் மனதினில் ஆறாதே.

இங்ஙனம்
அம்மா, அப்பா, கஜேந்திரன் அண்ணா,
பிரதீபன் அண்ணா,
நீர்வேலி தெற்கு. தங்கை துவாரகா,
பூதர் மட ஒழுங்கை. (சி/4551) உற்றார், உறவினர்.

---

## 2ஆம் ஆண்டு நிறைவில்
## எமது விழிகள் சிந்தும்
# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில் 1920.09.20



ஆண்டவன் அடியில் 1990.06.15

### திரு. இறப்பியல் யோசவ்
(இளைப்பாறிய யாழ் மாநகரசபை சிறாப்பர்)

இல்லத்தின் தலைவனாக
பாசத்தின் உறைவிடமாக, அன்பின் ஊற்றாக
கண்மணிபோல காத்த எம் பிதாவே!
உம்மைப் பிரிந்து - இன்று
ஈராண்டுகள் ஒழிந்ததுவே . . . .
எனினும் உன் நினைவலைகள்
எம் நெஞ்சங்களை விட்டு தீராதையா!
எங்களை விட்டுப்பிரிந்தது இறைவன்தான் சேர்த்த
எம் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்
திக்கும்.

19/8 மடம் தெற்கு வீதி, மனைவி பிள்ளைகள்,
யாழ்ப்பாணம். பேரன்மார், பேர்த்திஉற்றார்
உறவினர்

[சி. 4547]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

# போட்டிகள் ஒத்திவைப்பு

மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட போட்டிகள் யாவும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகிகள்
(சி/4557) சென். தோமஸ் வி. கழகம்

---

புங்குடுதீவு - நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம் (வ. து)

சகல பொதுச் சபை பிரதிநிதிகளுக்கும்

## விசேட பொதுக்கூட்டம்
# நிகழ்ச்சி நிரல்

காலம்:- 28-6-92-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

இடம்:- 201/1, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், சங்க தலைமைக் காரியாலயம்

தலைவர்;- திரு. ப. கனகலிங்கம் அவர்கள்

தவறாது சமூகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

01. இறைவணக்கம்
02. தலைவர் முன்னுரை
03. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை
04 சென்ற விசேட பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்
05. 1992/93ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தல்
06. 1992/9 ஆம் ஆண்டுக்கான உச்சக் கடன் எல்லையை அங்கீகரித்தல்
07. பொதுச் செலவுகளை அங்கீகரித்தல்
08. இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட இழப்புக்கள், நட்டங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையை தெரியப்படுத்தல்
09 புதிதாக 10 அந்தர் மேடை தராசு, பணம் வைக்கும் இரும்புப் பெட்டி ஆகியன கொள்வனவு செய்வது பற்றி ஆராய்தல்
10. 1989/90ஆம் ஆண்டுக்குரிய எண்பார்வை அறிக்கையை அங்கீகரித்தல்
11. பொதுச் செலவுகளுக்கு முன் அனுமதி பெறல்
12. விற்பனைத் திணைக்கள லொறி இல. 26/1039 கொள்வனவு செய்தல்
13. தளபாடங்கள் கொள்வனவு செய்த தொகையை அங்கீகரித்தல்
14. செயலாளர் நன்றியுரை

செயலாளர்,
புங்குடுதீவு--நயினா தீவு ப. நோ. கூ. சங்கம்
1992-06-13 யாழ்ப்பாணம்

குறிப்பு :- மேலதிக விபரங்கள் தேவைப்படின் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் காரியாலய நேரத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (சி/4554)

---

மேலும் கம்பெனிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைப்பதில் காட்டிய அக்கறை தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு விடயத்தில் காட்டத் தவறி விட்டனர் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

### சிங்கள

முடிவுக்கு கொண்டுவரமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் பொறுப்பு இந்தவிவகாரத்தில் மிக முக்கியமானது. இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்படல் வேண்டுமானால் அவர் நாட்டின் தலைவர் என்ற முறையில் இதற்கான வழிவகைகளை முன்னெடுத்துச் செல்ல கடமைப்பட்டு இருக்கின்றார் என்றும் தொண்டமான் குறிப்பிடத் தவறவில்லை.

### சிங்களக்கட்சிகள்

வேண்டுமென்பது அவசியம் என்பதை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே பல கோரிக்கைகள் முன் வைக்கப் பட்டுள்ளன இவற்றின் அடிப்படையில் தீர்வுத் திட்டம் ஒன்றை வகுப்பது சிரமமானது அல்ல என்றும், தெரிவுக்குழு மீண்டும்இருபத்தோராம் திகதி கூடும் என்றும் தெரிவித்தார்.

### வருட

எனவும் தெரிவித்த அவர் இதனால் 1994 இல் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடையக் கூடும் எனவும் தெரிவித்தார்.

ஆனால் நாட்டின் நலன்களை மதித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இருப்பதாகவும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மேதுலால் நேருவிடம் உறுதியளித்ததாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

### வீரவணக்கம

வீரவேங்கை நல்லையா (தேவராசா விஜயரஞ்சன் கிருஷ்ணன் கோவில் வடக்கு வீதி. பொன்னாலை சுழிபுரம்) என்பவர் சுகயீனம் காரணமாக சாவைத் தழுவிக்கொண்டார்.

இவருக்குதமிழீழவிடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறனர்.

நேற்றைய ஈழநாதத்தில் இவரது பெயர் வீரவேங்கை செல்லையா என தவறுதலாக இடம்பெற்றுள்ளது.

---

தக்கதாகும். தமை தெரிந்ததே.

---

# மரண அறிவித்தல்

## திருமதி
## கெங்காதேவி துரைராசசிங்கம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலம் சென்ற விசுவநாதர் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும் அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலம் சென்ற சுந்தையா இராசமலரின் மருமகளுமாகிய துரைராசசிங்கம் கெங்காதேவி 14-06-9 காலமானார் அன்னார் துரைராஜசிங்கத்தின் [தேங்காய் வியாபாரம்] அன்பு மனைவியும், சஜன் (செக்குவில் இந்துக்கலூரி காயத்திரி [யாழ் இந்து மகளிர் கல்லூரி] காண்டீபன் (யாழ். இந்து பிறேமரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இததேந்திரா, றொபின்திரா, ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சண்முகநாதன், வேலுப்பிள்ளை பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை, திருச்செல்வம் பொறியியலாளர் சிங்கப்பூர், திருமதி அன்னாமலை கமலாதேவி, திருமதி மகேஸ்வரன், சுந்தரா தேவி, மகேஸ்வரி, திருமதி மகாலிங்கம், கேதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரட்ணம், (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) திருமதி மகேஸ்வரி மயில்வாகனம், திருமதி மனோன்மணி தங்கேஸ்வரன், திருமதி இரத்தினசிகாமணி பாலசிங்கம், வரதராசா, திருமதி சந்திரவதனா சிவராம், திருமதி பராசக்தி சிறீதரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 15-06-92 திங்கட்கிழமை பிற்பகல் அன்னாரின் இல்லத்தில நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்

இந்து மகளிர் ஒழுங்கை, தகவல்:
சுந்தர்மடம் க. துரைராசசிங்கம்
(2677) (கணவர்)

---

# வாகன வரிசை இலக்கம்
# 14- 06- 1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்:-4363

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:- 3500

இராணுவம்அனுமதித்த இறுதி வாகனவரிசை இலக்கம்- 3425

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதித்த வாகன இலக்கம்:-
24-6699, 27-6439, 28-2345,
26-423, 27-9365, 27-2056
41-8629, 28-425, 26-5475,
27 8515, 26 7317, 24 7099
28-5039, 27-6769 25-1664
25 3080, 26-7525 26-6026
27-9489, 26-2764, 26 6197
27 7711, 26-8052 42 1178
42-3495, 27-9404, 24-6700,
28-5800, 24 7087, 24-6448
27-2089,

இராணுவம் வடபகுதிக்கு உள்ளே வர அனுமதித்த வாகன இலக்கம்:-
26-3130 42-2364, 24-8603,
41-8445, 28-2657 28-732
36-6360 25 954 36-4133
22-8175, 25 6319, 71-6276
72-8949 70-4313 73-1916,
70 9119, 70-3708, 72-6312,
71-6764 70-3720

13-06-1992 அன்று இராணுவம் வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதிக்க வாகன இலக்கத்தில் 26-6596 என்பதை 26-596 எனவும் 40-7573 என்பதை 40-2573 எனவும் 24-4705 என்பதை 24-4707 எனவும் திருத்திக் கொள்ளவும்.